# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## த பேரண்ட்ஸ் மன்றம் (கூட்டிணைத்தல்)

**த பேரண்ட்ஸ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*அம்பாந்தோட்டை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ நாமல் ராஜபக்ஷ அவர்களால் 2016, பெப்புருவரி மாதம் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2016, சனவரி மாதம் 25 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

**[ 84 ஆம் சட்டமூலம் ]**


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## த பேரண்ட்ஸ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

**முன்னுரை.**

த பேரண்ட்ஸ் மன்றம் என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்தோடு சொல்லப்பட்ட குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுறக் கொண்டுநடாத்தும் நோக்கத்துடன் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை சொல்லப்பட்ட மன்றத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**சுருக்கப் பெயர்.**

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின்   ஆம் இலக்க, த பேரண்ட்ஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**த பேரண்ட்ஸ் மன்றத்தைக் கூட்டிணைத்தல்.**

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் தற்போது குறித்த த பேரண்ட்ஸ் மன்றம் (இதனகத்துப் பின்னர் ''மன்றம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய அவ்வெண்ணிக்கையினரான உறுப்பினர்களும், இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அதன்கீழ் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கும் அமைய உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தனை ஆட்களும் " த பேரண்ட்ஸ் மன்றம்" என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமை கொண்ட (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூட்டிணைக்கப்பட்ட குழுவாதலும் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன்,

அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் என்பதுடனும், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :- கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) இலங்கையில் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி, சமூக, பொருளாதார மற்றும் கலாசார விழுமியங்களை மேம்படுத்தல் ;

(ஆ) சிரேஷ்ட பிரசைகளின் சகல அபிவிருத்தி நடவடிக்கைகளையும் விருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தல் ;

(இ) பொருளாதார மற்றும் நிதிப் பற்றாக்குறையினால் இடருறும் மாணவர்களுக்கு உயர்கல்வியைத் தொடர தைரியமூட்டலும் அதற்காக உதவுதலும் மற்றும் குறைந்த வருமானமுள்ள குடும்பங்களின் மாணவர்களுக்கும் மற்றும் பெற்றோர்கள் இருவரும் அல்லது அவர்களில் ஒருவராவது இறந்திருந்தால் அத்தகைய மாணவர்களுக்கு உயர்கல்வியைத் தொடர தைரியமூட்டலும் அதற்காக உதவுதலும் ;

(ஈ) இருதய சத்திரசிகிச்சை, சிறுநீரக மாற்றுச் சிகிச்சை வழங்குதல் மற்றும் புற்றுநோய்களால் அல்லலுறுபவர்களுக்கும் மற்றும் ஏழைகளுக்கும் உதவிகளை வழங்கல் ;

(உ) இலங்கையில் சிறுவர்களின் சுபீட்சம், கல்வி, விளையாட்டு, சமூக, பொருளாதார மற்றும் கலாசாரம் போன்றவற்றின் தரத்தை உயர்த்துதல் ;

(ஊ) அநாதைகள், வயோதிபர் இல்லங்களை அமைப்பது மற்றும் நடாத்திச்செல்வது மற்றும் சமூகநலன்களைப் பேணல் ;

(எ) குருடர், செவிடர், ஊமை மற்றும் அங்கவீனர்களுக்காக சமூகநலன்களை வழங்கலும், விடுதிகளை அமைத்தலும்;

(ஏ) அநாதரவான மற்றும் ஏழை மக்களுக்கு சக்கர நாற்காலி, ஊன்றுகோல்கள், மூக்குக்கண்ணாடிகள் போன்றவற்றை வழங்கல் ;

(ஐ) வீடற்றோருக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்தல் மற்றும் கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்ய உதவுதல் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களுக்கு அமைய தொண்டர் சேவையாளர்கள் மற்றும் ஏனைய சேவையாளர்களுக்கும் புலமைப் பரிசில் மூலமோ வேறு விதமாகவோ உதவிசெய்தல் ;

(ஓ) நூல் நிலையங்களை அமைத்துப் பரிபாலித்தல் புத்தகங்கள், வாரசஞ்சிகைகள், சஞ்சிகைகள் வெளியிடுவதற்கு அனுசரணை வழங்கலும், அவற்றை வெளியிடுதலும் மன்றத்தின் குறிக்கோள்களை அடைவதற்கு உசிதமெனக் கருதும் வேறு பணிகளில் ஈடுபடல் ;

(ஔ) மேற்குறித்த குறிக்கோள்களையுடைய ஏனைய நிறுவனங்களுடன் உறவையும் நட்பையும் மேம்படுத்தலும் ;

(க) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துகொள்வதற்கு அவசியமான கருத்தரங்குகள், மாநாடுகள் ஆகியவற்றை இலங்கையிலும் மற்றும் வேறு இடங்களிலும் நடாத்துதல் அல்லது அனுசரணை வழங்கல் ;

(ச) மன்றத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக உசிதமென மன்றம் கருதும் புத்தகங்கள், வாரசஞ்சிகைகள், சஞ்சிகைகள், செய்தித் தாள்கள் என்பவற்றை அச்சிடுதல், வெளியிடுதல் மற்றும் விநியோகித்தல் ; அத்துடன்

(ங) கூட்டுத்தாபனத்தின் அனைத்து குறிக்கோள்களையும் அல்லது அதில் எதனையும் அடைந்து கொள்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4**. (1) கூட்டுத்தாபனத்தின் முகாமையும் நிருவாகமும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவர்களின் பெரும்பான்மை யினரின் விருப்பின்மீது கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்க நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் அவசியத்திற்கேற்ப புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்தல், வெற்றிடங்களை நிரப்புதல் போன்றன தற்போதைய வலுவிலுள்ள விதிகளுக்கமைய முதலாவது பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(3) அட்டவணையில் குறிப்பிடப்பட்டவர்கள் அதன் ஆயுட்கால உறுப்பினர்களாவர் மற்றும் அவர்கள் விரும்பியகாலம் வரை அப்பதவியை வகிக்கலாம்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.*

**5**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின தும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத் தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களை யும், காரியங்களையும், செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங் களுள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய வங்கிக் கணக்கு களைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற் றுக்கும், பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப் பின்றியோ பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும் , அதன் நிதிகளை முதலீடு செய்வதற் கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்று வதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் வாக்குப் பெரும்பான்மை கொண்டு, பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக விராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறை யானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மை வகுக்கப்படுதலும், கட்டணங்கள் பெறுதலும் உறுப்பினர்களை அனுமதித்தலும், விலக்கு தலும் அல்லது அவர்கள் பதவியை விட்டு விலகுதலும்;

(ஆ) கூட்டுத்தாபனத்தினது கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் அவற்றில் அவதானிக்கப்படவேண்டிய நடவடிக்கை முறைகள், அத்தகைய கூட்டங்களுக்கான கூட் டநடப்பெண் மற்றும் அவர்களது தத்துவங்களை யும், கடமைகளையும் பிரயோகித்தலும், புரிதலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்பவர்களின் நியமனங் களும், தத்துவங்களும், கடமைகளும் மற்றும் பணிகளும்;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக வருவதற்கான தகைமைகள், தகைமையீனங்கள் ; அத்துடன்

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் விதிகள் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதி ஒன்று ஆக்கப்படுவதைப் போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் திருத்தப்படலாம். மாற்றப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*சங்கத்தினால் செலுத்தப்பட வுள்ளனவும் சங்கத்திற்குச் செலுத்தப்பட வுள்ளனவுமான கடன்கள்.*

**7**. இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்திற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப் படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று சங்கத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாப னத்தின் நிதியம்.*

**8**. (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக் கொடைகள் என்ற வகையாக இதுகாலவரை அல்லது இதன் பின்னர் பெறப்படவுள்ள எல்லாப்பணங்களும் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கக்கூடிய ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருத்தல்.*

**9**. கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, குத்தகை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, ஏதும் உடன்படிக்கையின்கீழ் அல்லது வேறுவகையாகக் கூட்டுத்தாப னத்துக்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இயலுமானதாலும், ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள வுள்ள முழுத்தத்துவத்தைக் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தலும் வேண்டும்.

**10.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாபனத்தின் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்க்கும் நோக்கத்துக்காக அவரிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு வருமதியாகவிருக்கக் கூடியவாறான அத்தகைய உறுப்பினரிடமிருந்து செலுத்தப்படவேண்டிய தொகையை விஞ்சுகின்றதான ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை உடையதும் அவற்றின் விதிகளின்படி அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டதுமான வேறு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றுதல் வேண்டும். அத்தகைய நிறுவனமானது கலைக்கப்படும் பட்சத்தில் அல்லது அதற்கு முன்னர் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

கலைக்கப்பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.

**12.** (1) கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்டு செலவிடப்பட்ட எல்லாப் பணங்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் ஒரு முறையாவது பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப்படும் கணக்காய்வாளர் ஒருவரால் அல்லது ஒன்றிக்கு மேற்பட்டோரால் பரிசோதனை செய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தலைவரினதும் அல்லது சபையினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்டவாறாக சபை உறுப்பினர் ஒருவரினதும் பேரவையின் இன்னுமோர் உறுப்பினரதும் முன்னிலையிலன்றி, எத்தன்மையினதுமான சாசனத்திலும் பொறிக்கப்படுதல் ஆகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அப்படி கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப் பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**அட்டவணை**

எசிலின் அழகப்பெரும (போசகர்)
டலஸ் தஹம் குமார அழகப்பெரும (போசகர்)
ஓஷதீ ஜகத் குமார அழகப்பெரும (ஸ்தாபன உறுப்பினர்)
சுஜாதா அழகப்பெரும (உறுப்பினர்)
நிகால் புஷ்ப குமார அழகப்பெரும (உறுப்பினர்)
ஶ்ரீனீ குமாரி அழகப்பெரும விஜேசூரிய (உறுப்பினர்)
ப்ரீதி குமாரி அழகப்பெரும குணவர்தன (உறுப்பினர்)

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*